# பேலியகொட நகர சபை

## கம்பஹா மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 05 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 29 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2014 சனவரி 22 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் பேலியகொட நகர சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியுள்ளது என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படும் எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேலியகொட நகர சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அச்செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகளையும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மின்சாரம், பொது, சுகாதாரம் போன்று பிரிவுகளில் ரூபா 5,000,541 தொகையான எஞ்சிய இருப்பு வெவ்வேறாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 13 கடன்கொடுத்தோருக்கு உரித்தான ரூபா 2,175,353 தொகை கொடுப்பனவு செய்யப்படுகையில் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக கடன்பட்டோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மாகாண வருமான அலுவலகத்தின் (முத்திரை வருமானம்) நிதி மானியக் கடன் அறவீடுகள் 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 3,377,795 தொகையான போதிலும் மீளாய்வாண்டின் போது நாட்குறிப்புப் பதிவு இல. 29 இன் மூலம் ரூபா 2,399,700 ஆக கணக்குகளிலி காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 978,095 ஆல் கடன் கணக்குகளின் மீதி அதிகரித்திருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் போது மதிப்பிழந்த காசோலைகள் இரண்டிற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 311,088 தொகை கணக்கு வைக்கப்படுகையில் மதிப்பிழந்த காசோலைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிராமையால் முற்கொடுப்பனவு மீதி அப் பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் ஐயவினாக்களுக்கு உட்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் கணக்கீடு செய்யப்படக்கூடிய பெறுமதி ரூபா 1,492,873 ஆகக் காணப்பட்டது.

#### (ஆ) கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 355,198,874 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 32,600,615 ஆக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்திற்கு மேலான மீண்டெழும் செலவினம் ரூபா 5,555,731 ஆக இருந்தது.

### 2.2 நிதி நிர்வாகம்

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் 06 மாதங்களுக்கு மேலான காலம் கடந்திருந்த ரூபா 45,083 பெறுமதியான 14 காசோலைகள் தொடர்பாக குறித்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் நிதிப் பிரமாணம் 189 மற்றும் 486 இன் பிரகாரம் ரூபா 495,045 தொகையான மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டவை | உள்ளபடி யானவை | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீதவரியும் வரியும் | 58,485 | 59,331 | 40,653 |
| (ii) | வாடகை | 2,278 | 1,519 | 644 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,854 | 1,413 | 1,714 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 26,119 | 9,500 | 115 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானம் ரூபா 26 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான மீதி ரூபா 9.5 மில்லியன் தொகையானமையால் ரூபா 16.5 மில்லியன் தொகையான குறைவு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நகர சபை கட்டளை அதிகாரச்சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 164(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஹொட்டேல், சிற்றுண்டிச்சாலை மற்றும் விடுதிகளின் வருடாந்த சேகரிப்பில் 1% கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ஐந்து சிற்றுண்டிச்சாலைகளிலிருந்து ரூபா 3,000 படி அறவிடப்பட்டிருந்தது.

(இ) நகர சபை கட்டளை அதிகாரச்சட்டத்தின் 170 அ (2) ஆம் பிரிவின் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய கட்டணம் அல்லது ஏனைய கொடுப்பனவுகள் அறவிடப்பட்டு இது நகர சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதற்காக தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுவது சபைச் செயலாளரான போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய வீதவரி ரூபா 40,652,618 தொகையும், வாடகையான ரூபா 644,176 தொகையும் அனுமதிப்பத்திரக் கட்டணமான ரூபா 174,212 தொகையும் அறவிடப்படுவதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 மிகைக் கட்டண அறவீடு**

நகர சபை கட்டளை அதிகாரச்சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 182(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணத்தின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 138,009 தொகையான மிகைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 2.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது நகர சபைக்காக ரூபா 94,248 தொகையானதும் ரூபா 67,200 தொகையானதுமான கைவிரலடையாள இயந்திரங்கள் இரண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆகஸ்ட் 07 ஆம் திகதி ரூபா 94,248 பெறுமதியான கைவிரலடையாள இயந்திரம் களஞ்சியத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் இது செயலிழந்திருந்தமையால் மீள ஓர் இயந்திரம் 2012 நவம்பர் 22 ஆம் திகதி ரூபா 67,200 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) முதலாவதாகக் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்திற்கான உத்தரவாதச் சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆகஸ்ட் 07 ஆம் திகதி நகர சபைக்குக் கிடைக்கப்பெற்ற இவ் இயந்திரம் செயலிழந்திருந்துள்ளமை அறிந்திருந்த போதிலும் இதற்காக 2012 செப்தெம்பர் 18 ஆம் திகதி ரூபா 94,248 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.6 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,049,472 ஆகக் காணப்பட்டதுடன் இதில் நீண்ட காலமாக அறவிடப்படாதிருந்த மீதியான ரூபா 805,125 காணப்பட்டது.

## 2.7 திண்மக் கழிவு முகாமைத்துவம்

2008 யூலை 30 ஆம் திகதிய 1560/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள 2008 இன் 01 ஆம் இலக்க திண்மக் கழிவு முகாமைத்துவ விதி'' சகல உள்ளூராட்சி நிறுவகங்களும்

செயற்படுத்த வேண்டும் என 2010 திசெம்பர் 21 ஆம் திகதிய எல்ஜீடீ/05/08/பொது/ வெலும மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (மேல் மாகாண) கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நகர சபை அவற்றை அமுல்படுத்தியிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது இது தொடர்பாக வருமானம் மதிப்பிடப்பட்டிராததுடன் செலவினமாக ரூபா 7,700,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக பின்வருமாறு பெறவேண்டிய வருமானம் நகர சபைக்கு பெறப்பட்டிருக்கவில்லை.

(அ) விதிக் கோவையின் 18(1) ஆம் இலக்கத்தின் படி உரிய உள்ளூராட்சி நிறுவகத்திற்குச் செலுத்தப்படும் வரிக்கு மேலாக, குப்பைகளை வீடுவீடாகச் சென்று சேகரிக்கும் செலவினத்தைத் தீர்ப்பதற்காக அதன் 1 ஆம் பட்டோலையில் உள்ள பயன்பாட்டுக் கட்டணத்தை நகர சபை அறவிட்டிருக்கவில்லை.

(ஆ) விதி இல. 09 இன் படி நகர சபை தனது 3 ஆம் பட்டோலையில் விதந்துரைக்கப்பட்டவாறு சில சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் குப்பைகளின் அளவுக்கேற்ற வகையில் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) விதி இல. 20 இன் படி நிர்மாணிப்பு கழிவுப் பொருட்கள் மற்றும் சேதமடைந்தவற்றின் சேகரிப்புகளுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இதன் படி விதி இல. 21 இல் உள்ள ‘‘இடத்திற்கான தண்டப்பணம்’’ அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) விதி இல. 22 இன் படி திண்மக் கழிவு வருமானத்தில் 20% அளவு கழிவுப் பொருட்கள் கழிவு முகாமைத்துவ அதிகாரசபை நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இவ் விதிக் கோவையின் 59 ஆம் விதியின் படி நகர சபை காபன் மயமான நுண்ணங்கியியலான கழிவுகளுக்காக சேதனமயமாக்கல் அல்லது தொழில்நுட்பமயமான விதி ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.8 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவகத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.9 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதிய மற்றும் பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் படி நிறுவகத்தின் நோக்கும் செயற்பணியும் மேற்கொள்ளப்படுவதற்காக 05 ஆண்டுகளுக்குக் குறைவற்ற காலத்திற்காக கூட்டிணந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) சொத்து முகாமைத்துவம்